



# அதிபத்த நாயனார் குருபூஜை விழா அழைப்பிதழ்

**நாள்: 12.09.2012–புதன்கிழமை**

**இடம்: திருஆனைக்கா 4–ம் பிரகாரம்**
**அதிபத்த நாயனார் திருவுருவம் புதிய தங்கமீன்**
**(திருவானைக்கா சிவனடியார்கள் புதிதாக செய்யப்பட்டது.)**

**நேரம்: மாலை 6.30**

**ஸ்தலச் சிறப்பு:** அட்ட நாகங்களில் ஆதிசேடனால் பூசிக்கப் பெற்றமையின் நாகை என்னும் பெயர் பெற்றது. புண்டரீக முனிவரைக் காயத்தோடு ஆரோகணம் செய்து கொண்டதால் காயாரோகணம் எனப் பெயர் பெற்றது. நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகம் சென்று நாககன்னியைக் கூடிப்பெற்ற புதல்வனே தொண்டை நாட்டை அரசாண்ட இளந்திரையன் எனப் பத்துப்பாட்டால் அறிகிறோம். குறுந்தொகைப் புலவர் ஒருவரின் பெயர் நன்னாகையார் எனக் கூறப்படுகிறது. சோழ மன்னர்களின் தலைநகரங்களுள் ஒன்றாகவும் இவ்வூர் விளங்கியது.

நாகர்கள் என்ற வகுப்பினர் குடியேறி வாழ்ந்தாலும் கடற்கரையை அடுத்துள்ள ஊர்கள் பட்டினம் என்ற பெயரால் வழங்கப் பெறுதலால் ஊர் நாகப்பட்டினம் என்ற பெயர் பெற்றது. காரோணம் கோயிலின் பெயர். இப்பெயருடைய கோயில்கள் தமிழ்நாட்டில் மூன்று உள்ளன. ஒன்று நாகைக்காரோணம், பிறிதொன்று குடந்தைக் காரோணம். மூன்றாவது கச்சிக்காரோணம். காய ஆரோகணம் என்பதன் திரிபே காரோணம் என்று கொண்டு புண்டரீக முனிவரை இறைவன் தன் மேனியில் ஏற்றுக்கொண்ட தலமாதலால் இப்பெயர் எய்திற்று என்று தலபுராணம் கூறுகிறது. இறைவன் புண்டரீக முனிவரைப் பூத உடலோடு வானுலகிற்கு ஆரோகணம் (ஏறச்செய்தல்) செய்வித்ததால் இப்பெயர் பெற்றதென்றும், திருவோணம் திருமாலுக்குரிய விண்மீன். கருநிறம் பொருந்திய திருமால் வழிபட்டதால் காரோணம் என்ற பெயரைப் பெற்றதென்றும் கூறுவர். ஆதிபுராணம், சிவராசதானி, பார்ப்பதீச்சரம், அரவநகரம் முதலிய பெயர்களும் இத்தலத்திற்கு உரியனவாகத் தலபுராணம் கூறுகிறது. அம்பிகை, முருகன், திருமால், அகத்தியர், வசிட்டர், முசுகுந்தன், அரசகேசரி, விசித்திரகவசன், விரூரகன், பத்திரசேனன், பாற்கரன், மித்திரன், காளகண்டன், சண்டதருமன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்றதலம்.

நாகைக் காரோணத்து இறைவன் சிவமும் சக்தியுமாய் கூடிநின்று தன்னை விரும்பிய அடியவர்கட்கு அருள்நல்குபவன் எனக்கூறும் திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் இரண்டும், இத்தல பெருமானை வணங்கியவரே பிறவிப்பயனை எய்தியவராவர், ஏனையோர் பிறந்தும் பிறவாதவராவர் என்றும், எப்பொழுதும் நினைத்தலைச் செய்யும் அனபர்களைத் லட்சுமிதேவி பிரியாதிருப்பாள் எனக்கூறும் திருநாவுக்கரசர் அருளிய பதிகம் நான்கும், சுந்தரர் இத்தல இறைவரைத் தொழுது பொற்பூணும், மணிப்பூணும், நவமணிகளும், ஆடை, சாந்தம், குதிரை, சுரிகை முதலியனவும் வேண்டிப் பாடியருளிய பதிகம் ஒன்று ஆக ஏழு தேவாரத் திருப்பதிகங்களும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பாடல்களும் பெற்றது. முசுகுந்த சோழ மன்னன் இந்திரனிடம் பெற்றுவந்த ஏழு தியாகேசர் திருவுருவங்களையும் தாபிதம் செய்த சப்தவிடங்கத்தலங்களில் இத்தலம் சுந்தர விடங்கர், பாராவாரதரங்க நடனம் எனவும், 64 சக்தி பீடங்களுள் ஒன்றாய் திகழ்வது. காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி, நாகை நீலாயதாட்சி என இத்தல அம்பிகை மக்கள் வழக்கில் இணைந்து வழங்கப் பெறுவதும், கயிலையும் காசியும் போல இத்தல முத்திமண்டபத்தைப் பெற்றுள்ளதும், அதிபத்த நாயனார் அவதரித்த பெருமையுடையதும், தசரதன் சனிப் பிரதிட்டை செய்து வழிபட்டதும், ஏழு முனிவர்கட்கும் இறைவன் மூலலிங்கத்திலிருந்து தோன்றி சோமாஸ்கந்தராய்க் காட்சி கொடுத்தும் அகஸ்தியருக்கு திருமணக்கோலம் காட்டி அருளியதும் இத்தலமாகும்.

**அதிபத்த நாயனார் வரலாறு:** நாகைக் கடற்கரையில் பரதவர் சேரியில் நம்பியார்நகர் என வழங்கும் நுளைப்பாடியில் பரதவர் குலத்தில் அவதரித்தவர் அதிபத்தர். பரதவர் தலைவராய்ச் சிவபத்தியில் சிறந்த நாள்தோறும் கடலில் மீன் பிடிக்குங்கால் முதல் மீனை இது சிவனுக்கு என்று அன்போடு கடலிலேயே விட்டு வந்தார். இவ்வாறு ஒழுகும் நாளில் மீன் வளம் குறைந்து ஒவ்வொரு மீனே அவர் வலையில் அகப்படத் தொடங்கிற்று. அதனையும் அவ்வந்நாளில் கடலில் விட்டு வறுமையால் சுற்றம் வாடவும் தாம் வருந்தாது தன் கடமையை வழுவாது செய்து வந்தார். ஒருநாள் இவர்தம் ஏவலர்கள் கடலில் வலை வீசியபோது உலகெலாம் விலையெனக் கொள்ளத்தக்க நவமணிகளால் உறுப்பமைந்த பொன்மீன் ஒன்று அகப்பட்டது ஞாயிறு போல ஒளிவீசிய அம்மீனைக் கண்ட அதிபத்தர் இம்மீனும் என்னை ஆட்கொண்டருளிய சிவனுக்கே உரியதாகும். இம்மீன் அவர் திருவடியைச் சேர்க எனக் கடலில் விட்டார். அப்போது சிவபெருமாள் விடைமீது விசும்பில் தோன்றி அஞ்சலி கூப்பிநின்ற அதிபத்தரைச் சிவலோகத்திலே, அடியவர்களுடன் அமர்ந்திருக்கும் அருளைப்புரிந்து மறைந்தருளினார். இறைவன் அதிபத்தர்க்கு அருள்புரிந்த விழா ஆவணி மாதத்தில் ஆண்டுதோறும் நிகழ்ந்து வருகிறது.

தினகரன்
திருச்சி 14 செப்டம்பர் 2012

## நாகை கடற்கரையில் கோலாகலம்

# அதிபத்த நாயனார் சிவனுக்கு தங்க மீன் அர்ப்பணிக்கும் விழா

நாகை, செப். 14: நாகை கடற்கரையில் அதிபத்த நாயனார் தங்க மீனை சிவனுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி நேற்று கோலாகலமாக நடைபெற்றது.

மீனவரான அதிபத்த நாயனார் தன் வலையில் சிக்கிய தங்க மீனை சிவபெருமானுக்கு அர்ப்பணித்தால், அவருக்கு சிவபெருமான், பார்வதியுடன் காட்சியளித்த நிகழ்ச்சி, நாகை நீலாயதாட்சி அம்மன் சமேத காயாரோகண சாமி கோயிலில் ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தாண்டுக்கான விழா நேற்று நடந்தது. இதையொட்டி நாகை நீலாயதாட்சி அம்மன் கோயிலில் இருந்து அம்மன் சமேத காயாரோகண சாமி, ரிஷப வாகனத்தில் எழுந்தருளி புதிய கடற்கரைக்கு ஊர்வலமாக வந்தார்.

நம்பியார் நகர் புதிய ஒளி மாரியம்மன் கோயில் மற்றும் அதிபத்தர் வணங்கும் அமுதீசர் கோயில்களில் இருந்து அடியார்கள் சீர்வரிசைகளை ஊர்வலமாக எடுத்து சென்றனர். நாகை புதிய கடற்கரையில், அதிபத்தனார் பரம்பரையை சேர்ந்த ஒருவர் படகில் ஏறி தங்க மீனை சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கும் விதமாக கடலில் வீசினார். அப்போது நையாண்டி, தப்பாட்டம் உள்ளிட்ட வாத்தியங்கள் முழங்க காயாரோகண சாமிக்கு தீப தூப ஆராதனைகள் நடந்தது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர். இதனால் நாகை புதிய கடற்கரை நேற்று விழாக் கோலம் பூண்டிருந்தது.



நாகை புதிய கடற்கரையில் நேற்று நடந்த அதிபத்த நாயனார் தங்க மீனை சிவபெருமானு
அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி நடந்தது. ஒருவர் தங்க முலாம் பூசிய மீனை கடலில் வீசுகிற